Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 64

வியாழக்கிழமை
29 ஜனவரி 2026

தை 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

5ஆம் கட்டக் கடன்

## ஐ.எம்.எப். விரைவில் இலங்கைக்கு

கொழும்பு, ஜன. 29
இலங்கைக்கு ஐந்தாம் கட்ட கடன் வழங்கல் தொடர்பில், விரிவான பரிசீலனை நடத்துவதற்காக, நாணய நிதிய உயர்மட்டக் குழு விரைவில் வரவுள்ளது.
டித்வா புயலின் பாதிப்புகள் »12

சுழிபுரத்தைத் தொடர்ந்து

# பண்டத்தரிப்பில் இருந்தும் வெளியேறியது இராணுவம்!

யாழ்ப்பாணம், ஜனவரி 29
யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்புப் பகுதியில், நீண்டகாலமாக முகாம் அமைத்துத் தங்கியிருந்த இராணுவத்தினர், நேற்றுடன் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர். »12

## கச்சதீவு திருவிழா; ஆய்வுக்குழு பயணம்

யாழ்ப்பாணம், ஜன. 29
கச்சதீவு பெருவிழாவுக்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில், விசேட குழுவொன்று நேற்றுக் கச்சதீவுக்குப் பயணம் மேற்கொண்டு ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளது. »11

## ஆபத்தான சாரத்தியம்; பஸ் சாரதி இடை நிக்கம்!

மன்னார், ஜன. 29
போக்குவரத்து விதிகளை மீறிய வகையில், திறன் பேசியைப் பயன்படுத்தியவாறு பேருந்தைச் செலுத்திய சாரதியொரு »11

இராணுவம் வெளியேறிய

## பண்டத்தரிப்புக் காணியில் பொருளாதாரத் திட்டங்கள்!

தவிசாளர் ஜெசீதன் உதயனுக்குத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 29
இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்து நேற்று விடுவிக்கப்பட்ட பண்டத்தரிப்புக் காணியில், மிகச்சிறந்த பொருளாதாரத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று வலி.தென்மேற்கு சபையின் தவிசாளர் ஜெசீதன் உதயனுக்குத் தெரிவித்தார். »11

கிளிநொச்சியில் கோரம்

## பேருந்து - டிப்பர் விபத்து நால்வருக்குப் படுகாயம்

கிளிநொச்சி, ஜன. 29
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், இ.போ.ச. பேருந்தும், டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளானதில் நான்கு »12



அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போராட்டம்

## மூவரின் உடல்நிலை மோசம் ஒருவர் சிகிச்சைக்கு மறுப்பு!

கொழும்பு, ஜன. 29
அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பதவி நிலைகளை ஒழுங்குபடுத்துமாறு வலியுறுத்தி, கொழும்பில் போராட்டத்தில் ஈடுபட்டு வருவோரில் மூவரின் உடல்நிலை மோசமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.
அபிவிருத்தி உத்தியோகத் »11



மஹாராஷ்டிராவில்

## ஹெலிகொப்டர் விபத்தில் துணைமுதல்வர் உயிரிழப்பு

புதுடில்லி, ஜன. 29
இந்தியாவின் மகாராஷ்டிரா மாநில துணைமுதல்வரும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவருமான அஜித் பவார் ஹெலிகொப்டர் விபத்தில் நேற்று உயிரிழந்தார்.
மராட்டிய மாநிலம் பரமாதியில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகச் சென்றபோதே, இந்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது. அவருடைய மறைவுக்கு இந்தியப் »11

அரச நிதியைப் பயன்படுத்தி

## தனிப்பட்ட பயணத்தையே மேற்கொண்டார் ரணில்!

விசாரணைகளில் உறுதி என சட்டமா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 29
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரது பாரியாரின் பட்டமளிப்பு விழாவுக்காக, தனிப்பட்ட முறையிலேயே பிரிட்டனுக்குச் சென்றுள்ளார். இது வொரு உத்தியோக »11

திருகோணமலையில் புத்தர்சிலை

## கைதான தேரர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு!



கொழும்பு, ஜன. 29
திருகோணமலை பிரதான கடற்கரைப் பகுதியில் அத்துமீறி புத்தர்சிலை வைத்த விவகாரத்தில், 4 தேரர்கள் »11

“ஆத்துவெள்ளம் தானே அண்ணன் குடி, தம்பி குடி எண்டு கும்மியடிச்சிருக்கினம் கண்டியளோ”

மூச்சந்தி முரளி

சட்டவிரோத இழப்பீடு

## கோத்தாபய உள்ளிட்டோருக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவு

கொழும்பு, ஜன. 29
'அரகலய' போராட்டத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறைகளில், தமது உடைமைகள் அழிக்கப்பட்டதாகக் கூறி சட்டவிரோதமாக இழப்பீடு பெற்றவர்கள் என குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு அறிவித்தல் அனுப்புமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் ஆட்சிக்கு எதிராக 'அரகலய' போராட்டத்தை »11

## ரணிலின் செயலாளருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜன. 29
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை, பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் »11



## ரணிலுக்கு ஆதரவாக நீதிமன்றில் எம்.பி.க்கள்

கொழும்பு, ஜன. 29
முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு எதிரான நிதிமோசடி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில், அவருக்கு ஆதரவு வழங்குவதற்காக முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 28.01.2026 | திகதி 28.01.2026 | திகதி 28.01.2026 | திகதி 28.01.2026 | திகதி 28.01.2026 | திகதி 28.01.2026 | திகதி 28.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4330 | சீட்டிழுப்பு இலக்கம் 1397 | சீட்டிழுப்பு இலக்கம் 0356 | சீட்டிழுப்பு இலக்கம் 2436 | சீட்டிழுப்பு இலக்கம் 6088 | சீட்டிழுப்பு இலக்கம் 2118 | சீட்டிழுப்பு இலக்கம் 0204 |
| ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கினம் மேஷம் | ஆங்கில எழுத்து Y | ஆங்கில எழுத்து V | ஆங்கில எழுத்து D | ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கினம் துலாம் |
| | | | சுப்பர் இலக்கம் 03 | | | |
| வெற்றி இலக்கங்கள் 01 41 42 47 | வெற்றி இலக்கங்கள் 16 38 49 51 | வெற்றி இலக்கங்கள் 7 6 7 6 | வெற்றி இலக்கங்கள் 47 54 64 70 | வெற்றி இலக்கங்கள் 5 1 4 4 6 7 | வெற்றி இலக்கங்கள் 09 40 49 52 | வெற்றி இலக்கங்கள் 12 16 45 |
| விசேட எழுத்து C | | | | | விசேட எழுத்து U | |

# இந்தியாவின் நிபா வைரஸால் இலங்கைக்குப் பாதிப்பு இல்லை

சுகாதாரப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.29**

**இந்தியாவில் தற்போது பரவிவரும் நிபா வைரஸ் தொற்றால் இலங்கைக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று சுகாதாரப் பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.**

இந்தியாவில் கேரள மாநிலம் உட்படப் பல பகுதிகளில் நிபா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வருகிறது. நோயைக் கண்டறிவதற்கான பரிசோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன், பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவிலிருந்து அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வரும் நிலையில், இதுதொடர்பில் சுகாதாரப் பிரதி அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

நிபா வைரஸ் தொற்றால் இலங்கைக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. இந்த வைரஸ் தொற்றால் எவரேனும் பாதிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்படும் பட்சத்தில் அதை எதிர்கொள்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் அடையாளம் காணப்பட்டுள்ள நிபா வைரஸ் தொற்றுத் தொடர்பாகப் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை- என்றார். (எ-இ)

சுபிரி தன சம்பத
திகதி 28.01.2026 | தினம் புதன்கிழமை | வெற்றி வாரம் 0796
ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கம் 4 4 7 8 3 7

Super Ball
திகதி 28.01.2026 | தினம் புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3062 | ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கம் 05 28 29 67

சனிதா
திகதி 28.01.2026 | தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கம் 23 32 64 76 | வெற்றி வாரம் 5223

SASIRI
திகதி 28.01.2026 | தினம் புதன்கிழமை
வெற்றி வாரம் 0892 | வெற்றி இலக்கம் 08 24 50

லக்ன ராசி
திகதி 28.01.2026 | தினம் புதன்கிழமை
ரிஷபம் | வெற்றி இலக்கம் 20 24 41 49 | சீட்டிழுப்பு வாரம் 4774

KAPRUKA
திகதி 28.01.2026 | தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து S | சுப்பர் இலக்கம் 08 | வெற்றி இலக்கம் 02 06 39 41 | வெற்றி வாரம் 2238

அத கோடிபதி
திகதி 28.01.2026 | தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கம் 05 41 56 64 | வெற்றி வாரம் 2888

# பாக். பிரதிநிதிகள் இலங்கை வருகை!

கொழும்பு, ஜன.29

பாகிஸ்தான் பிரதமரின் தொழில் மற்றும் உற்பத்தித்துறையின் விசேட உதவியாளர் ஹாரூன் அக்தர் கான் மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்துள்ளார்.

பாகிஸ்தான்-இலங்கை கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் 18ஆவது அமர்வில் அவர் பங்கேற்கவுள்ளார்.

இந்த அமர்வை வர்த்தகம், வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

ஹாரூன் அக்தர் கானுடன் ஐந்து சிரேஷ்ட பாகிஸ்தான் அதிகாரிகள் கொண்ட குழுவும் வருகை தந்துள்ளது. (ச-இ)

# வட்டி வீதத்தில் மாற்றமில்லை

கொழும்பு,ஜன.29

ஓரிரவுக் கொள்கை வட்டி விகிதத்தை 7.75% என்ற தற்போதைய மட்டத்திலேயே மாற்றமின்றிப் பேணுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயக்கொள்கைச்சபை தீர்மானித்துள்ளது.

உள்நாட்டுப் பொருளாதார மாற்றங்கள் மற்றும் உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகளைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ச-இ)

# விமானசேவைகள் தலைவர் பதவிவிலகல்



கொழும்பு, ஜன.29

விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் இலங்கை (தனியார்) லிமிடெட்டின் தலைவர் ஏர் வைஸ் மார்ஷல் ஹர்ஷ அபேவிக்ரம பதவியிலிருந்து விலகியுள்ளார்.

2022ஆம் ஆண்டு ஒக்ரோபரில் அவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

அவரின் இந்தப் பதவி விலகலைத் தொடர்ந்து, அமைச்சின் செயலாளர் டபிள்யூ.டபிள்யூ.எஸ். மங்கள அந்தப் பதவியின் கடமைகளை மேற்பார்வையிட பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச)

# கனடாத் தூதுவருடன் சங்குக் கூட்டணி சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜன.29

கனடாத் தூதுவருக்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினருக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் யாழில் உள்ள தனியார் விடுதியில் இடம் பெற்றது.

கலந்துரையாடலில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், எதிர்கால அரசியல் நகர்வுகள் உள்ளிட்ட முக்கியமான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் இணைத்தலைவர்கள் மற்றும் கட்சியின் செயலாளர் ஆகியோர் பங்கேற்றனர். (ச-27,66)



# 323 கொள்கலன்கள் விவகார விசாரணை; வாராந்தம் கூடவுள்ள நாடாளுமன்றக்குழு

கொழும்பு, ஜன.29

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து 323 கொள்கலன்களைக் கட்டாய பௌதீகப் பரிசோதனைக்கு உட்படுத்தாமல் விடுவித்தமை தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட நாடாளுமன்றக்குழு, ஒவ்வொரு புதன்கிழமையும் கூடுவதற்கு தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பான விசாரணைகளை மூன்று மாதங்களுக்குள் நிறைவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து, அறிக்கையிடுவதற்காகவும், முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான நாடாளுமன்றக்குழு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தலைமையில் கூடியது.

அதிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

குழுவின் எதிர்காலச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் முறை மற்றும் குழுவிற்கு அழைக்கப்படவேண்டிய தரப்பினர் தொடர்பாக ஆரம்பகட்டக் கலந்துரையாடல்கள் அதில் இடம்பெற்றன.

மூன்று மாத காலத்துக்குள் விசாரணை நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய எதிர்பார்ப்பதாக குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அமைச்சர் அநுர கருணாதிலக, பிரதி அமைச்சர்களான சதுரங்க அபேசிங்க, சுனில் வட்டகல, அர்கம் இல்யாஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, அஜித். பி.பெரேரா, டி.வி.சானக்க, முஜிபுர் ரஹ்மான், மயில்வாகனம் ஜெகதீஸ்வரன் மற்றும் லக்மாலி ஹேமசந்திர ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவ்வாண்டில்

# அரசு ஊழியர்களின் சம்பள உயர்வுக்கு ரூ.220 பில்லியன் மேலதிக ஒதுக்கீடு


கொழும்பு ,ஜன.29

**இலங்கை அரசாங்கத்தினால் மருத்துவர்கள் உள்ளிட்ட அனைத்து அரச ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள அடிப்படைச் சம்பள அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவதற்காக, இந்த ஆண்டில் மாத்திரம் மேலதிகமாக 220 பில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவிட வேண்டியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சம்பள அதிகரிப்புக்காக 2025ஆம் ஆண்டில் 110 பில்லியன் ரூபா செலவிடப்பட்ட நிலையில், இந்த 2026ஆம் ஆண்டில் அது 220 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. எதிர்வரும் 2027ஆம் ஆண்டில் இது 330 பில்லியன் ரூபாவாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு வெறும் கொடுப்பனவாக அல்லாமல், அடிப்படைச் சம்பளத்துடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. இதனால் ஜனவரி மாதம் முதல் ஊழியர்களுக்கு உயர்ந்த அடிப்படைச் சம்பளம் கிடைப்பதோடு, அவர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் ஏனைய விடுமுறைக்காலக் கொடுப்பனவுகளும் இதற்கேற்ப அதிகரிக்கும். நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டே இந்தச் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

எனவே அரச ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் தேவையற்ற அல்லது நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைக்கவேண்டாம் - என்றார். (ச-இ)



## வீட்டில் மதுபானம் விற்றவர் கைது!

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் வீட்டில் வைத்து மதுபானம் விற்பனை செய்த சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜி.எம்.எச்.புத்திக்க சிறிவர்த்தன அவர்களுக்குக் கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் இந்த விசேட தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின்கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மாறுவேடத்தில் சென்று குறித்த நபரிடம் மதுபானத்தைக் கொள்வனவு செய்ய முயன்றபோது சந்தேகநபர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். (ச-27,20)

## கனடா அனுப்புவதாக மோசடி மன்னாரைச் சேர்ந்தவர் கைது

கொழும்பு, ஜன.29

கனடாவுக்கு அனுப்புவதாகக்கூறி ஒரு கோடியே 7 இலட்சத்து 5000 ஆயிரம் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் மன்னாரை சேர்ந்த ஒருவர் நீர்கொழும்பு விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

சந்தேகநபர் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அதேவேளை, ருமேனியா நாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக்கூறி சுமார் 9 இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டமை தொடர்பாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக விண்ணப்பிக்கும்போது, தனியார் நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கும் சமயத்தில், உரிய முறையில் சரிபார்த்து, நம்பகமான நிறுவனங்களையே தேர்ந்தெடுக்கவேண்டும் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)



## கட்டுநாயக்க விமானநிலையத்தில் 'ஈ-கேற்'

கொழும்பு, ஜன.29

கட்டுநாயக்க விமானநிலையத்தின் வருகை முனையத்திலுள்ள இலத்திரனியல் நுழைவாயில்கள் நேற்று முதல் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்பட்டுள்ளன என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. நான்கு இலத்திரனியல் நுழைவாயில்கள்திறக்கப்பட்டுள்ளன என்று திணைக்களத்தின் பிரதம குடிவரவு அதிகாரி ஜீட் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியுடன் இந்த 'ஈ-கேற்' திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் விமான நிலையத்தின் வினைத்திறனை அதிகரிக்கமுடியும் என்று பிரதம குடிவரவு அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## மாணவர்களுக்கு போதைப்பொருள் தடுக்கப் பொலிஸார் கழுகுப்பார்வை

பாடசாலை மாணவர்களுடன் தொடர்புடைய போதைப்பொருள் விற்பனை தொடர்பாகப் பொலிஸார் கண்காணிப்புகளை அதிகரித்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு. வூட்லர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பாடசாலைகளுக்கு அருகில் பாப்சிகிள்ஸ், பஞ்சு மிட்டாய், ரொபி, பிஸ்கட் மற்றும் இனிப்புகளை விற்பனை செய்பவர்களாகக் காட்டிக்கொண்டு மாவா மற்றும் பாபுல் போன்ற போதைப் பொருள்களை ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் விநியோகிக்கின்றன. இதுதொடர்பாக 11 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் விநியோகத்தைத் தடுக்க சந்தேகத்துக்கிடமான நடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் முறைப்பாடு செய்ய வேண்டும்- என்றார். (ச-இ)

## றோட்டில காயுது விசம்

இப்ப ஊருக்குள்ள 'அரிவிவெட்டு' அமர்க்களமா நடக்குது. அரிவிவெட்டு எண்டாலே எங்கட சனத்துக்கு ஒரு விசர்க்குணம் விசுக்கெண்டு வந்திடும். வேறயொண்டுமில்லை, எங்கையெல்லாம் காப்பெற் றோட் இருக்கோ அங்கையெல்லாம் வெட்டின நெல்லைப் பரவிக் காயப்போடுறதுதான் அந்த விசர்க்குணம். அரசாங்கம் கோடி கோடியாச் செலவழிச்சு றோட்டுப் போட்டது வாகனங்கள் ஓடத்தானே எண்டு நீங்கள் நினைச்சால், அது உங்கட பிழை. எங்கட ஆக்களுக்கு அது இலவசமாக் கிடைச்ச 'நெல்லைக் காயப்போடுற களம்'! தறப்பாள் வாங்கக் காசு இல்லையெண்டு சொல்லி, கேட்டுக்கேள்வி இல்லாமல், வாகனங்கள் அதால போகோனுமே எண்ட நினைப்பே இல்லாமல் றோட்டின்ர அரைவாசிக்கு நெல்லைக் கொட்டிப் பரவி வைச்சிருப்பினம். அது தெரியாமல் வேகமா வாகனங்கள் வந்து பிரண்டடிச்சால் அதுக்கு ஆர் பொறுப்பு? போனவருசமும் உப்பிடிக் காயப்போட்ட நெல்லில மோட்டார் சைக்கிள் சறுக்கி ரண்டுமூண்டுபேர் செத்தவை.

காயப்போட்டால் வெயில் நல்லா அடிக்கும், கெதியா நெல்லுக் காய்ஞ்சிடும் எண்டு நினைக்கிறவை, அரிசியோட சேர்த்து 'விசத்தையும்' காயவைக்கினம் எண்டதுமட்டும் விளங்கேலை. சோறு காய்ச்சேக்கை நெல்லைக் குத்தி, உமியைக் கழிச்சுப் போட்டுத்தானே காய்ச்சுறம். அப்ப எப்பிடி உந்த விசம் உடம்பில கலக்கும்? எண்டு சிலர் கேப்பியள். பெற்றோலியக் கழிவிலதான் தார் செய்யினம். கொதிவெயிலில உந்தத் தார் உருகி நச்சு ஆவியா மாறி, அப்பிடியே உமியைக் கடந்து நேரா நெல்லுக்குள்ள இருக்கிற அரிசிமணியோட 'ஒட்டி உறவாடும்'. பிறகு அப்பிடியே அது சோறா மாறி, எங்கட குடலுக்குப் போறதால, கான்சரும் வருமாம். அதை விட, றோட்டில நெல்லுக் காயேக்க அக்கம்பக்கத்தால வாகனங்கள் போய்க்கொண்டு தானே இருக்கும்? லொறி, பஸ் எல்லாம் போகேக்க, அதுகளின்ர ரயர் தேய்ஞ்சு கொட்டுண்டிற 'மைக்ரோறபர்' தூள்களும், ஈயம் காட்மியம் மாதிரியான உலோகங்களும் அந்த நெல்லோட மிக்ஸ் பண்ணி, கடைசியில அதுவொரு 'ரயர் பிரட்டல்' மாதிரி இருக்கும். அதுக்குப் பிறகு சிட்னி பெயிலியர் ஆகுது, கான்சர் வருது எண்டு கத்திக்குளறி ஒரு பிரியோசனமும் இல்லை.

பழைய ஆக்கள் பாதையிலதான் காயப் போட்டவை இப்ப மட்டும் என்ன பூச்சாண்டி காட்டுறியள்? எண்டு சிலர் யோசிப்பினம், முந்தி இப்ப இருக்கிற மாதிரி காப்பெற் றோட்டோ தார் றோட்டோ இல்லை. கூடுதலா எல்லாப் பாதையளும் மண் றோட் தான். மண்ணுக்க போட்ட நெல்லைக் கழுவினால், மண் கரைஞ்சு போடும். ஆனால் தார் அப்பிடியில்லை. அது ஆவியாகி, உமிக்குள்ளால ஊடுருவி அரிசியோட கலந்து, ஆக்களின்ர குடலுக்கை புகுந்து விளையாட்டுக் காட்டும். நெல்லைக் காயப் போடுறதுக்கு படங்கு வாங்கிற காசை மிச்சம் பிடிக்கப்போய், கான்சர், சிட்னி வருத்தம் எண்டு அதை விடக்கூடக் காசை ஆஸ்பத்திரியளுக்குக் கொட்டிக் குடுக்க வேண்டிவந்திடும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**2026 ஜனவரி 29 ஆம் திகதி வியாழக்கிழமை, சாவகச்சேரியின்** மையப்பகுதியில், **PMF பினான்ஸ் பீஎல்சி,** தனது புதிய கிளையைத் திறந்து வைக்கிறது என்பதை சாவகச்சேரி பிரதேச மக்களுக்கு அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.

எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு, துரிதமான மற்றும் மிகச்சிறந்த சேவைகளை வழங்க நாம் எப்போதும் காத்திருக்கிறோம். மேலும், அவர்களின் தேவைகளையும், அபிலாசைகளை பூர்த்தி செய்யவும், அதற்கு உதவி புரியவும் எமது அசைக்க முடியாத அர்ப்பணிப்பைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறோம்.

- நிலையான வைப்புகள்
- சேமிப்புகள்
- குத்தகை
- வரைவுகள்
- நிலையான சொத்து விற்பனை
- வர்த்தகக் கடன்கள்
- அடைமானக் கடன்கள்
- தொழில்முனைவோர் நிதி வசதிகள்
- பிணைய வர்த்தகம்
- தங்க ஆபரணக் கடன்கள்

**துரித இலக்கம்:**
**0217 389 006**

pmf finance
"Your Trusted Path-Maker"

**பினான்ஸ் பீஎல்சி**
இல. 148, கண்டி வீதி,
சாவகச்சேரி.
மின்னஞ்சல்: info@pmf.lk
வலைத்தளம்: www.pmf.lk

www.skillsads.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# போராட்டங்கள் சூழ் தீவு...!

'தொழிற்சங்க நடவடிக்கை' என்ற பெயரைக் கேட்பது மீண்டும் இயல்பான விடயமாக நாட்டில் மாறிவருகின்றது. முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் காலத்திலும், அதன்பின்னர் ரணிலின் காலத்திலும் தொழிற்சங்க நடவடிக்கைகள் நாட்டில் தாராளம் பெற்றிருந்தன. எனினும், ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் காலத்தில் அத்தகைய போராட்டங்கள் பெரியளவில் இடம்பெறவில்லை. இதற்கு, தற்போதைய அரசாங்கத்தின்மீது, அரச திணைக்களங்கள் கடந்த ஒரு வருடமாகக் கொண்டிருந்த நம்பிக்கை மற்றும் சகிப்புத்தன்மை என்பனவே பிரதானமான காரணங்களாக அமைந்தன. ஆனால், அந்த நம்பிக்கையை அரச துறைகள் தற்போது மெல்லமெல்ல இழந்துவருகின்றன. இதற்கான எடுத்துக்காட்டாகவே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரின் அண்மைய தொழிற்சங்க நடவடிக்கையையும், ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் போராட்ட அறிவிப்பையும் குறிப்பிடமுடியும்.

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுள்ளது என்று கூறப்படுகின்ற போதிலும், பல்வேறு துறைகள் இன்னும் மீளமுடியாப் பின்னடைவை எதிர்கொண்டுள்ளமை வெளிப்படையான அவதானிப்பு. அதிலொன்றுதான் மருத்துவத்துறை. இலங்கையில் மருத்துவ நெருக்கடிகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளன என்று, சுகாதாரத்துறை சார்ந்தவர்கள் அரசாங்கத்துக்கு அண்மைக்காலமாக தொடர் எச்சரிக்கைகளை விடுத்துள்ளபோதும், அரசாங்கம் அதுதொடர்பில் அக்கறை காட்டுவது போன்று தெரியவில்லை. இதனால், சிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்கள் வெறுங்கையுடன் திருப்பி அனுப்பப்படவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

'நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன' என்று அரசாங்கத்தினரும், துறைசார் அமைச்சரும் கடந்த சில மாதங்களாகத் தொடர்ச்சியாகக் கூறிவருகின்றனர். எனினும், நிலைமைகளில் எந்த மாற்றமும் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. மாறாக, முன்னைய நிலைமை இன்னமும் மோசமடைந்துள்ளது என்றே கருதவேண்டியிருக்கின்றது. பல அரசாங்க மருத்துவமனைகளில் இனிவரும் காலங்களில் சிகிச்சைகள் மற்றும் சத்திரசிகிச்சைகள் என்பனவும் மட்டுப்படுத்தவேண்டி ஏற்படலாம். தற்போதுள்ள நிலைமை தொடருமானால் நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு முழுமையாகவே முடங்கிவிடும் ஆபத்து இருக்கவே செய்கின்றது. ஆதலால், நிலைமையின் தீவிரத்தை அரசாங்கம் விரைவில் உணர்ந்துகொள்ளவேண்டும்.

மருத்துவத் துறையில் நிலவும் வளப்பற்றாக்குறை, மருந்துப்பொருள்கள் தட்டுப்பாடு என்பன இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைக்கான துணைக் காரணங்களே. பிரதான காரணம், ஊதிய ஒப்பந்த விவகாரங்களுடன் தொடர்புடையது என்பது வெள்ளிடைமலை. டித்வா புயல் காரணமாக நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து கிடக்கின்ற நிலையில், அத்தகைய பேரழிவு ஏற்பட்ட இரண்டே மாதத்தில் ஊதிய ஒப்பந்தங்களுக்காகத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவது அவ்வளவு நேர்த்தியான விடயமல்ல. இந்த விடயத்தில் மருத்துவர்களின் பக்கம் நியாயம் இருந்தாலும். அவர்களின் கோரிக்கை சரிதான் என்றாலும், பரந்துபட்ட பேச்சுவார்த்தையே மிக அவசியம். தற்போதைய காலச் சூழலில் இத்தகைய நடவடிக்கைகள் நிலைமையை மோசமாக்குமே தவிர தீர்வைத் தராது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயும் காத்தல் அரிது**

**பொருள்:** நல்ல பண்புகளாகிய மலையின்மேல் ஏறிநின்ற பெரியோர், ஒரு கணப்பொழுதே சினம் கொள்வார் ஆயினும் அதிலிருந்து ஒருவரைக் காத்தல் அரிதாகும்.




# பெரும்பான்மைப் பலத்தை ஆயுதமாக்காது அரசாங்கம்



அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.29**
**நாடாளுமன்றத்தில் தமக்குள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை தேசிய மக்கள் சக்தி, அரசியல் ஆயுதமாக பயன்படுத்தாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. அதில் சட்டமா அதிபர் விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சட்டமா அதிபரை ஜனாதிபதியால் நீக்கமுடியாது. அதுதொடர்பான பொறுப்பு நாடாளுமன்றத்துக்கே உள்ளது. சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர் ஆகியோரை பதவி நீக்குவதற்கு நடைமுறைகள் உள்ளன.

நாடாளுமன்றத்தில் எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் இருந்தாலும் அநீதியான முறையில் அது பயன்படுத்தப்படமாட்டாது-என்றார். (எ-44)

## துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் பலி!

காலி, ஜன.29
காலி-அம்பலாங்கொடையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நிகழ்வொன்றில் இனந்தெரியாத இருவர், இளைஞர் ஒருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

உயிரிழந்தவர் கலபொட பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடையவராவார். (ச-இ)



## தங்கம் விலை ரூ. 4 இலட்சம் +

கொழும்பு,ஜன.29
உலக சந்தையில் தங்கத்தின் விலை அதிகரித்துள்ள நிலையில் அதற்கு இணையாக உள்நாட்டுத் தங்கத்தின் விலையும் அதிகரித்துள்ளது. அதன்படி கொழும்பு செட்டியார் தெரு தங்கச் சந்தை வட்டார நிலைவரப்படி, நேற்று 24 கரட் பவுண் ஒன்றின் விலை 405,000 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. அதேவேளை 22 கரட் பவுண் ஒன்றின் விலை 374,600 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. (ச-இ)

## அஸ்வெசும விநியோகம்



கொழும்பு,ஜன.29
அஸ்வெசும முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களுக்கான நலன்புரி நன்மைகளை நேற்றுமுன்தினம் முதல் வங்கிக் கணக்குகளிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியுமென நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது. (ச-இ)



# காற்றின் தரம் மாசு

கொழும்பு,ஜன.29
இலங்கையின் பல நகரங்களில் காற்றின் தரம் எதிர்வரும் நாள்களில் மோசமடையக்கூடும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி அடுத்த இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு நாடு முழுவதும் காற்றின் தரம் சற்று ஆரோக்கியமற்ற நிலைக்குத் தள்ளப்படக்கூடும்.

இதனால், முடிந்தவரை முகக்கவசங்களை அணியுமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை - தை 16
30.01.2026
சுபநேரம் : 06.36 – 08.06
ராகுகாலம் : 11.06 - 12.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்கோள் விழா

யாழ்ப்பாணம், ஜன.29
கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் கால்கோள் விழா வித்தியாலய அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் வித்தியாலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 8.30மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-41-17)

★★★★

யாழ்ப்பாணம், ஜன.29
நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் கால்கோள் விழா கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9.30மணிக்கு இடம்பெறவுள்ளது. கல்லூரி ஆசிரியர் திருமதி ஸ்ரீரதி முருகசோதி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கல்லூரியின் பழையமாணவர் டாக்டர் ஆ.கிருஷ்ணா முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (ச-41-17)

★★★★

யாழ்ப்பாணம், ஜன.29
அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30மணிக்கு இடம்பெறும். வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக இளைப்பாறிய ஆசிரியர் கந்தசாமி ஸ்ரீதரன் கலந்துகொள்வார். (41-17)

★★★★

யாழ்ப்பாணம்,ஜன.29
பளை வேம்பொடுகேணி சீ. சீ. த. க. பாடசாலையில் தரம் ஒன்றில் இணையவுள்ள மாணவர்களை வரவேற்கும் கால்கோள்விழா இன்று முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வடக்கு கல்வி வலய சுகாதாரமும் உடற்கல்வியும் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆ.பவானந்தன் கலந்துகொள்வார். (ச-9)

★★★★

யாழ்ப்பாணம்,ஜன.29
வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயத்தின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் தங்கவடிவேல் செந்தூரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வேலாயுதர் அரசகேசரி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-66)

# திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஜன.29
சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மட்டுவில் கிளை விற்பனை நிலையத்தின் கோப் சிற்றி(கூட்டுறவநகர்) நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.
சங்கத்தின் தலைவர் கு.ஜனகன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அகல்யா செகராசா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (41-17)



# தைப்பூச மஞ்சத்திருவிழா!

வவுனியா,ஜன.29
தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு வவுனியா ஓமந்தை அரசர்பதி ஸ்ரீ கண்ணகி அம்மன் பொற்கோவிலில் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை புதிர் எடுத்தல் நிகழ்வும் பௌர்ணமி விசேட பூசையும் கண்ணகி அம்மனுக்கு மஞ்சத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. அன்றைய தினம் காலை 9 மணி முதல் 10 மணி வரை புதிர் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்று 10.30 மணிக்கு அம்மனுக்கு விசேட அபிசேகப் பூசைகள், பௌர்ணமிப் பூசைகள் நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும். மாலை 6 மணிமுதல்மூலஸ்தானப்பூசையைத் தொடர்ந்து விசேட வசந்தமண்டபப் பூசையும் நவசக்தி அர்ச்சனையும் இடம்பெற்று மஞ்சத்திருவிழா இடம்பெறவுள்ளது. தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். (ச-100)

# தைப்பூசம்

யாழ்ப்பாணம்,ஜன.29
தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு மயிலிட்டி வீரமாணிக்க தேவன் துறை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.
அன்றையதினம் மாலை 4.30 மணியளவில் அம்பாளுக்கு விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து சந்தனக்காப்புப் பூசை இடம்பெறும். தொடர்ந்து 6 மணிக்கு மூலஸ்தானப் பூசை, வசந்த மண்டபப் பூசை என்பன நடைபெற்று அம்பாள் விசேடஅலங்காரத்தில் மங்கள வாத்தியத்துடன் உள்வீதி, வெளி வீதி வந்து அருள்பாலிக்கவுள்ளார். (ச-100)

★★★★

யாழ்ப்பாணம்,ஜன.29
மீசாலை வடக்கு சத்திய ஞானக் கோட்ட ஞானசபையின் தைப்பூசத்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி ஞானக் கோட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
தைப்பூசத்தை முன்னிட்டு கடந்த 20ஆம் திகதி திருவாசக முற்றோதலுடன் ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிகழ்வுகள் பெப்ரவரி இரண்டாம் திகதி நண்பகல் வரை நடைபெறும். (ச-9)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜன.29
வடமராட்சி பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ சமர்ப்பண கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.
நேற்றுப் புதன்கிழமை காலை 7.59 மணி முதல் கர்மாரம்பம் இடம்பெற்ற நிலையில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மலை 3 மணி வரை எண்ணைய்க்காப்பு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து நாளை வெள்ளிக்கிழமை காலை 7.32 மணிமுதல் 8.06 மணி வரையான சுபநேரத்தில் மகாகும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ச-100)

# ஏடு தொடக்கல்

யாழ்ப்பாணம்,ஜன.29
வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் தைப்பூசத் திருநாளான எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.36 மணி முதல் 10.30 மணி வரை ஏடு தொடக்கல் நிகழ்வும், மாலை 5 மணிக்கு ஸ்ரீ முருகப்பெருமானுக்கு உருத்திராபிஷேகமும், அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும், உள்வீதி உற்சவமும் இடம்பெறவுள்ளன. (க)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்குத் தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் [illegible]

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 01 . 1933



மறைவு 26 . 01 . 2026

## பரமேஸ்வரி வடிவேலு

மலேசியாவை பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி வடிவேலு கடந்த (26.01.2026) திங்கட்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - கண்ணம்மா தம்பதியரின் அன்பு மகளும், சுப்பையா வடிவேலுவின் (வில்லுப்பாட்டு வடிவேலு) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலைச் செல்வன், திருச்செல்லம் (கனடா), யோகராணி, புஸ்பராணி (சுவிஸ்), அமரர் செல்லராணி, அருட்செல்லம் (கனடா), பவளராணி ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்வரதி, சாந்தி, தர்மலிங்கம், விஜயரட்ணம், மோகனா, பாலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கார்த்திக், ரகுமான், சுகன்யா, வித்யா, காயத்திரி, கார்த்திகா, மினோபா, செந்தூரன், மிதுனன், கிஷோன், லத்திக்கா, அபிராம், கிருஷானி, லதுஷியா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் கவீனா, அருணயன், துசாரிக்கா, ருஸ்மிகன், நயனிக்கன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2026) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 443 5797, 077 613 5083
இல.22, மதவடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(CS/60570) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 02 . 1932



மறைவு 27 . 01 . 2026

## கந்தையா தெட்சணாமூர்த்தி

(ஓய்வுபெற்ற அதிபர்)

தெல்லிப்பழை விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தெட்சணாமூர்த்தி அவர்கள் நேற்றுமுன்தினம் (27.01.2026) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சேதுப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற செல்வமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நகுலாம்பிகை, சரஸ்வதி, இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அனுலா (யா/நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயம்), தர்மிலா (பிரான்ஸ்), செந்தூரன் (பொறியியலாளர் - நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருந்தவநாதன், சச்சிதானந்தன், நிரஞ்சனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கணேசலிங்கம், கருணாதேவி, தியாகலிங்கம் மற்றும் புஸ்பதேவி, சாரதாதேவி, ஞானலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், அக்ஷயன், ஆருயன், அன்பரசன், துர்கா, தமிழ்மதி, பிரணாஷ், ஸ்ரீஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2026) வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் சிவழுதாராயர் வீதி, சுன்னாகம் தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகபூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
அனுலா - மகள் - 077 729 5392
தர்மிலா - மகள் - +33 781 182 271
செந்தூரன் - மகன் - +94 77 146 2574

(CS/60578) J-1

# மரண அறிவித்தல்



## கருப்பையா ராஜகுமாரன்

அவர்கள் கடந்த (24.01.2026)
சனிக்கிழமை காலமானார்.
அன்னாரின் திருவுடல்
இன்று (29.01.2026) வியாழக்கிழமை
முற்பகல் 11.00 மணியில் இருந்து அவரது
இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு
நல்லடக்க ஆராதனை நாளை
(30.01.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல்
01.00 மணியளவில் நடைபெற்று
எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபை,
வசந்தபுரம் சேமக்காலையில் நல்லடக்கம்
செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்
நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 12.09.1971

மறைவு 24.01.2026

இல. 125/40 AV வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 638 4250,
077 420 6571

(CS/60586) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்கோள் விழா

யாழ்.ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலையின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலையின் சௌந்தரநாயகம் ஆனந்தராணி ஞாபகார்த்த திறந்தவெளி அரங்கில் அதிபர் திருமதி.சந்திரலதா கனேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் வலிகாமம் வலய ஆங்கில ஆசிரிய ஆலோசகர் சிவசுப்பிரமணியம் சிறீதர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-66)

★★★★

ஊரெழு கணேச வித்தியாசாலை தரம் ஒன்ற மாணவர்ககான கால்கோள் விழா பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 8.30மணிக்கு இடம்பெறவுள்ளது.
வித்தியாலய அதிபர் இ.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊரெழு கணேச வித்தியாசாலை ஓய்வுபெற்ற ஆசிரியர் இராஜமனோகரி தம்பிமுத்து, சிறப்பு விருந்தினர்களாக பழையமாணவர் பொன்னுத்துரை றஞ்சன், பழையமாணவர் நடராசா பரமசிவம், பழையமாணவர் நடேசபிள்ளை சுந்தரேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 01.01.2026 வியாழக்கிழமை அன்று
சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தெய்வம்

### திருமதி பாலபரமேஸ்வரி சண்முகராஜா

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 30.01.2026 வெள்ளிக்கிழமை அன்று அதிகாலை 05.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று ஊர்வலமாக பொலிகண்டி தீர்த்தக் கரையில் அஸ்தி கரைக்கப்படும். பின்னர் 31.01.2026 சனிக்கிழமை அன்று முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணபதி மில்,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

(CR 46985)A

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19.07.1953 — மறைவு 08.02.2025

அமரர்

### நவரத்தினராசா பரமேஸ்வரி

பன்னிரண்டு திங்கள் கழிந்ததுவோ - அம்மா
பரிதவிக்கும் எமை வந்து
அணைப்பீரோ - அம்மா
துயர் என நாம் துவண்டு விட்டால்
எம் துயர் துடைக்க வருவீரே!
ஆறாத துயரம் அம்மா
என்றும் உம் பிரிவு
மாறாத வடுக்களுடன் - இன்றும்
மண்ணிலே வாழ்கின்றோம்.


என்றும் உம் நினைவுடன்..

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

(CR 00000) A

## மரண அறிவித்தல்



பிறப்பு 11.09.1939 — இறப்பு 28.01.2026

### இராசையா மகாதேவன்
(முன்னாள் இ.போ.ச. சாரதி)

சங்கரத்தை, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் மாவடி, வட்டுக் கிழக்கு, வட்டுக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய இராசையா மகாதேவன் அவர்கள் நேற்று (28.01.2026) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற லலிதாம்பாள் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான இரத்தினசபாபதி - சுருதி தம்பதியரின் அன்பு மருமகனும், தேவமனோகரி (கிராம அலுவலர் J/159, சங்கரத்தை), தரணிதரன் (அதிபர், யா/புன்னாலைகட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம்), சசிதரன் (நில அளவை அத்தியட்சகர், பிரதேச நில அளவை காரியாலயம், ஆனைமடுவ, புத்தளம்), முரளீதரன் (கணக்காளர், அண்ணா கோப்பி, யாழ். கிளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவமணி, நவமணி, அமரர்களான புவனேஸ்வரி, சிவசுப்பிரமணியம், அம்பலவாணர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலைச்செல்வன், கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், உடுவில்), யுகிதா (முகாமைத்துவ உதவியாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), சிவரூபி ஆகியோரின் அன்பு மாமனாரும், பரணிகா, ரகுபரன், அருணி, அகிலவன், கோசிகன், விஷ்ணுவர்த்தனன், அனேகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவடி, வட்டுக்கிழக்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 30.10.1949 — மறைவு 28.01.2026

### Dr திருமதி தவராசா தங்கரட்ணம்

பளை வீமன்காமம் மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட Dr திருமதி தவராசா தங்கரட்ணம் (சித்தவைத்திய கலாநிதி Rimp. - 13963) நேற்று (28.01.2026) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான (சித்த வைத்தியகலாநிதி) சின்னத்தம்பி - அசுபதி தம்பதியினரின் அன்பு மகளும், தவராசா (ஓய்வுநிலை கிரமசேவையாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும், குமரன் (ஆசிரியர் மானிப்பாய் இந்துக்கல்லூரி), அருள்குமரன் (ஆசிரியர் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி), உமா (ஆயுள்வேதவைத்தியர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மயூதரன் (சிறைச்சாலை திணைக்களம்), மதுரா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யாழ் வலயக்கல்வி அலுவலகம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தன்சியா ஆரகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2026) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் தச்சன் தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
குமரன் - 0779773538
அருள்குமரன் - 0779596710

பளை வீமன்காமம்,
மாவிட்டபுரம்.

(CR/46982) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணக வாழ்வின்
1ம் வருட நினைவு

"நான் இருக்கும் இடத்திலே அவர்களும் என்னோடு இருக்க விரும்புகிறேன்"
(அரு 17:24)



அமரர் அன்ரன் யோசவ்
மரிஸ்ரெல்லா மதுரம்

மண்ணில் 24.09.1948 | விண்ணில் 31.01.2025

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்கான திருப்பலி 31.01.2026 சனிக்கிழமை சுண்டுக்குளி புனித யூவானியார் ஆலயத்தில் காலை 6.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். அதில் கலந்து செபிக்கும்படி உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
கணவர்
கலாபூஷணம். ம.அன்ரன் யோசவ்
உறவினர்கள், நண்பர்கள்.

இல.18B கோயில் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (CS/60563) J-1

## கால்கோல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 29

மட்டுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கால்கோல் விழா, பாடசாலை அதிபர் தர்மினி அம்பிகைபாகன் தலைமையில் பாடசாலையில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-131)


## இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிர்மாய்ப்பதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், ஜன. 29

இராணுவச் சிப்பாய் ஒருவர், தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு உயிர் மாய்க்க முயற்சித்த நிலையில், அவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி தம்பு தோட்டத்தில் அமைந்துள்ள, 523ஆவது இராணுவப் படைப்பிரிவு முகாமில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குருநாகல் பிரதேசத்தை சேர்ந்த 32 வயதுடைய இராணுவச் சிப்பாயே இவ்வாறு உயிர் மாய்க்க முயற்சித்துள்ளார். இதையடுத்து, அவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-20)

சவால்களுக்கு மத்தியில்
தளராது எதிர்கொள்ள
சிறு மற்றும் நடுத்தர
வியாபாரிகளான உங்களுக்கு
DFCC வங்கி வழங்கும்



ரு. 25 மில்லியன் வரை விசேட கடன் வசதி
5% வருடாந்த வட்டி வீதத்தோடு

10 வருடங்கள் வரையான
மீள செலுத்தும் காலம்

மேலதிக விபரங்களை அருகிலுள்ள
DFCC கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

0112 350000 www.dfcc.lk
பிச் ரேட்டிங் A (lka)
இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வர்த்தக வங்கி

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

யாழ்ப்பாணத்தில் தெற்காசியாவின்
கல்வி மையமாக உருவாகியிருக்கும் ESOFT UNI

உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளுக்கு காத்திருக்கும் 2025 ஆண்டு மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும்

யாழ் ESOFT UNI இன் கல்விப் பீடங்கள்

FACULTY OF COMPUTING
FACULTY OF ENGINEERING
FACULTY OF BUSINESS & LAW
FACULTY OF LIFE SCIENCE

அதிநவீன வசதிகளுடன் வடக்கு மற்றும் கிழக்கு மாணவர்களுக்கான உயர் கல்வி கற்கை நெறிகளினை மேற்குறிப்பிட்ட கல்விப்பீடங்களின் கீழ் கற்றுக்கொள்ள ESOFT UNI யாழ் பல்கலைக்கழகம் சிறந்த வாய்ப்பினை வழங்கியுள்ளது.

AFTER A/L'S

BRITISH DEGREES (பிரித்தானியப் பட்டப்படிப்புகள்)

COMPUTING
- BSc (Hons) in Network & Network Security
- BSc (Hons) in Software Engineering
- BSc (Hons) Cyber Security & Digital Forensics
- BEng (Hons) Computer Networking & Cloud Security
- BEng (Hons) Software Engineering
- BSc (Hons) Computing
- BSc (Hons) Data Science

BUSINESS & LAW
- BA(Hons) Marketing
- BA (Hons) Business Administration
- BSc (Hons) Banking and Finance
- LLB (Hons) Law

ENGINEERING
- BEng (Hons) Civil Engineering

LIFE & SCIENCE
- BEng (Hons) Biomedical Engineering
- BSc (Hons) Nursing (Top-up)
- BSc (Hons) Psychology

LONDON METROPOLITAN UNIVERSITY



ESOFT UNI

இல.609 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

076 8700 400

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை எதிர்கொள்ள அஞ்சுகிறது அரசாங்கம்

*ரஞ்சித் மத்தும பண்டார காட்டம்*

கொழும்பு, ஜன. 29

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம், தேர்தலை எதிர்கொள்வதற்கு அச்சப்படும் நிலையில் உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வாக்குறுதி வழங்கிய போதிலும், இதுவரை நிச்சயமற்ற நிலையே காணப்படுகின்றது. தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இவ்வாறான நிலையிலேயே, தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அச்சப்படுகின்றது என, ரஞ்சித் மத்தும பண்டார கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணசபைத் தேர்தலை நடத்தும் நோக்கமும் விருப்பமும் இந்த அரசாங்கத்துக்கு இல்லை. ஏனெனில், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய தரப்பினரே இன்று ஆட்சியில் உள்ளனர். எனவே, இவர்கள் தேர்தலை நடத்துவார்கள் என எதிர்பார்க்க முடியாது. மக்கள் யார்பக்கம் உள்ளனர் என்பதை அறிவதற்காக தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்குச் சவால் விடுக்கின்றோம்.

தலதா மாளிகைமீது தாக்குதல் நடத்திய கட்சியொன்றின் தலைவரே இன்று ஜனாதிபதியாக உள்ளார். இவ்வாறான நபர்களிடம் இன, மத நல்லிணக்கத்தை எதிர்பார்க்க முடியாது. 13ஆவது திருத்தத்துக்கு எதிராக 20 ஆயிரம் பேரைக் கொன்றவர்களிடம் நாட்டின் எதிர்காலத்தை எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை - என்றார். (ம-44)


## வேலையாட்கள் தேவை

கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:077 386 6250

(CS 31102) A


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
## மீள்கேள்வி அறிவித்தல் - 2026

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ்க்கண்ட மூன்று (03) விற்பனைக் கூடங்களை மூன்று (03) வருட காலத்திற்கு மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்காக, தகுதியானவர்களிடமிருந்து மூடிய மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி விண்ணப்ப விநியோகம் : 29.01.2026 முதல் 11.02.2026 வரை (மு.ப. 9.00 - பி.ப. 3.00)
கேள்வி ஏற்கும் இறுதித் திகதி : 12.02.2026 மு.ப. 10.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி : 12.02.2026 மு.ப. 10.00 மணி
கேள்விப் பத்திரம் வழங்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்

**முக்கிய நிபந்தனைகள்**

1. கேள்விதாரர் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் நிரந்தர வசிப்பிடமுடையவராக இருந்து, வாழ்வாதார நோக்கத்திற்காக ஆண் அல்லது பெண் எவரும் விண்ணப்பிக்க முடியும்.
2. கேள்விகள் மூலப்பிரதி, இணைப்பிரதி என இரு பிரதிகளில் மூடிய தபால் உறைகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியின் கேள்விப்படிவத்துடன் தேசிய அடையாள அட்டை, கிராம அலுவலரின் நற்சான்றிதழ் மற்றும் வதிவிடச் சான்றிதழ், குடும்ப வதிவிட அட்டையின் நிழற்படப்பிரதிகளை இணைத்துச் சமர்ப்பிக்க வேண்டும். குறித்த ஆவணங்களில் எவற்றையேனும் சமர்ப்பிக்கத்தவறினால் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. கேள்விப்பத்திரக் கட்டணம் ரூபா.1.000.00 மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா.1.500.00 செலுத்தி விண்ணப்பம் பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆகக் குறைந்த மாத வாடகையை விடக் குறைவான கேள்விகள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.
5. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் மாத வாடகையின் மூன்று (03) மாதங்களுக்கான தொகையை முற்பணமாக செலுத்த வேண்டும். பாதுகாப்பு வைப்புத் தொகை செலுத்தி, அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 07 நாட்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
6. மாதாந்த வாடகை அடுத்த மாதத்தின் 10ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். 10 ஆம் திகதி விடுமுறை அல்லது போயா தினமாக வரும் பட்சத்தில் 10 ஆம் திகதிக்கு முன்னர் வரும் அலுவலக நாளில் வாடகையைச் செலுத்த வேண்டும். அவ்வாறு 10 ஆம் திகதியன்று செலுத்த தவறினால் 10% வீதம் தண்டமாக செலுத்தவேண்டும்.
7. தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் வாடகை செலுத்தத் தவறினால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும்.

- மேலதிக நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் சபையுடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்திற்கமைவாக அமையும்.

கடைகளின் விபரம்


| தொ. இல | கடை இலக்கம் | இட அமைவு | வியாபாரத்தின் தன்மை | ஆகக் குறைந்த மாத வாடகை (வரிகள் நீங்கலாக) | கேள்வி வைப்பு பணம் | பாதுகாப்பு வைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 01 | இலக்கம்-01 | அக்கரை சுற்றுலா கடற்கரை, அச்சுவேலி | சிற்றுண்டி வகை தேனீர் | 10,000.00 (உபகரணங்கள் வாடகை உட்பட) | 1,500.00 | 100,000.00 |
| 02 | இலக்கம்-02 | அக்கரை சுற்றுலா கடற்கரை, அச்சுவேலி | குளிர்பானம், தின்பண்டங்கள் | 6,000.00 (உபகரணங்கள் வாடகை உட்பட) | 1,500.00 | 50,000.00 |
| 03 | இலக்கம்-05 | சிறுவர் பூங்கா, நீர்வேலி | சிற்றுண்டி வகை, குளிர்பானம் தின்பண்டங்கள் | 6,000.00 (உபகரணங்கள் வாடகை உட்பட) | 1,500.00 | 50,000.00 |

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அல்லது 021 205 8867 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தியாகராஜா நிரோஷ்
தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.

2026.01.29

## மரண அறிவித்தல்



தோற்றம் 29 . 12 . 1958

மறைவு 28 . 01 . 2026

### சுப்பிரமணியம் சிவானந்தம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவானந்தம் நேற்று (28.01.2026) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அழகுராணியின் (ஓய்வுநிலை உப அதிபர்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - புவனேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற தயானந்தன் மற்றும் பூவேந்திரநாதன், விஜியானந்தன், நித்தியானந்தன், சச்சிதானந்தன், காலஞ்சென்ற வசந்தாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சரோஜினி, கமலாசினி, அழகம்மா, பிறேமானந்தன், சுமதி, பிரபானந்தன், காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் சாரதாதேவி, செல்வராணி, செல்வராணி, சோபனா சோமேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் தெய்வேந்திரம், பேரின்பநாயகம், ஜெயந்தி, காலஞ்சென்ற இராஜேந்திரகுமார் மற்றும் திகழ்ஜோதி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2026) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஈஞ்சடி, மதவடி ஒழுங்கை,
சுதுமலை வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### ஸ்ரீ றஞ்சினி தெய்வேந்திரன்

(இளைப்பாறிய இசை ஆசிரியை யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி)

யாழ் கொக்குவில் கிழக்கு ஸ்ரேசன் றோட்டினை பிறப்பிடமாகவும், சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீறஞ்சினி தெய்வேந்திரன் அவர்கள் கடந்த (21.01.2026) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், தெய்வேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், பவனுஜா (இசை ஆசிரியை - லண்டன்) அவர்களின் பாசமிகு தாயாரும், கஜாகரன் (பொறியியலாளர் - லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும், வர்சிகன், நேருகன், பானுசிறி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஸ்ரீகௌரி (லண்டன்), ஸ்ரீரெங்கா (இலங்கை), ஸ்ரீதர்மா (ஐக்கிய அமெரிக்கா), ஸ்ரீமதி (இலங்கை), ஸ்ரீராம் (லண்டன்), காலஞ்சென்ற ஸ்ரீபார்த்தன் மற்றும் ஸ்ரீகரன் (லண்டன்), ஸ்ரீதயாபரி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், லோகேந்திரன் (கனடா), மகாலட்சுமி (இலங்கை), மனோறாஜினி (சுவிஸ்), காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் மனோபத்மினி (ஜேர்மனி), மனோறஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
தெய்வேந்திரன் - கணவர் - 0044 747 549 1027
பவனுஜா - மகள் - 0044 747 891 0676

(CS/60585) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




டேவிட் பீரிஸ் லொஜிஸ்ரிக்ஸ் வடக்கின் முதலாவது பல்துறைக் களஞ்சியத் தொகுதியை யாழ்ப்பாணத்தில் நேற்றுத் திறந்துள்ளது. மயிலிட்டி தெற்கு, மயிலிட்டி கட்டுவன் வீதியில், விமான நிலையத்தை அண்மித்து குறித்த வளாகம் அமைந்துள்ளது. (ம-26)

## கச்சதீவு...

பெப்ரவரி மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கடற்படையினர் தற்போது முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறான நிலையிலேயே, இந்தப் பணிகளை விசேட குழுவொன்று நேற்று நேரில் ஆய்வு செய்துள்ளது.

நெடுந்தீவுப் பங்குத்தந்தையும், கச்சதீவு ஆலயப் பரிபாலகருமான அருட்தந்தை பி.பத்திநாதன் அடிகளார், நெடுந்தீவு பிரதேசசெயலர் பிரபாகரன், நெடுந்தீவு பிரதேசசபை தவிசாளர் சங்கரப்பிள்ளை சத்தியவரதன், யாழ்.மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்படை அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட குழுவே இந்த ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளது. (அ-ம-100)

## பண்டத்தரிப்புக்...

இந்தக் காணி விடுவிப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது சபைக்கு பெரும் வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய காணியையே இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்திருந்தனர். இந்த விடயங்களை எடுத்துக்கூறி, அண்மையில் இராணுவத்தினருடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தினோம். காணிக்கான ஆவணங்களின் நிழற்பிரதியை எம்மிடம் இருந்து பெற்றுக்கொண்டனர். இரு வாரங்களுக்குள் ஒரு முடிவை அறிவிப்போம் என்றனர். அதுபோல் தற்போது அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

அந்தக் காணியின் ஒரு பகுதியிலேயே எமது சபையின் கொல்களம் உள்ளது. அது இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காரணத்தால், தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள கொல்களம் ஒன்றுக்கு வாடகை செலுத்த வேண்டிய நிலைமை எமக்கு ஏற்பட்டிருந்தது. தற்போது எமக்கு கொல்களம் ஒன்று தேவையாக உள்ள நிலையில், அதை அங்கு மீள இயக்குவது தொடர்பில் சிந்திக்கின்றோம். எனினும், குறித்த வட்டார உறுப்பினர்களினதும், மக்களினதும் கருத்துக்களைப் பெறவேண்டியுள்ளது.

அத்துடன் தற்போது விடுவிக்கப்பட்ட காணி, பரந்து விரிந்த காணியாகும். அங்கு பல்வேறு பொருளாதாரத் திட்டங்களையும் செயற்படுத்த முடியும். எனவே, சபைக்கு மிகச்சிறந்த பொருளாதாரத்தைத் தரக்கூடிய வகையில் அந்தக் காணியை மாற்றியமைப்போம் - என்றார். (அ-ம)

## ஆபத்தான...

வர் சேவையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று வடக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் எஸ்.விமலேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

கடந்த 25ஆம் திகதி காலை மன்னாரில் இருந்து புறப்பட்ட தனியார் பேருந்தொன்றின் சாரதி, தனங்கிளப்பு வரை, வீதிப் பாதுகாப்பு மற்றும் சேவை விதிமுறைகளை மீறி, திறன்பேசியில் உரையாடியவாறு பேருந்தைச் செலுத்தியிருந்தார்.

இது தொடர்பில் ஆதாரங்களுடன் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகள் இடம்பெற்றன. இதன் அடிப்படையில் அந்தச் சாரதி மறு அறிவித்தல் வரை சேவையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், கடந்த 23ஆம் திகதியன்று மாங்குளம் மகா வித்தியாலய மாணவர்களை ஏற்றாமல் சென்ற தனியார் பேருந்து தொடர்பாக, பாடசாலை நிர்வாகத்தால் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் பேருந்தின் சாரதியும் நடத்துநரும் அழைக்கப்பட்டு, கடுமையாக எச்சரித்து அனுப்பப்பட்டனர் - என்றுள்ளது. (அ-ம-56)

## மூவரின்...

தர்களை ஆசிரியர் சேவையில் உள்வாங்குதல் அல்லது அவர்களது பதவி நிலைகளை முறையாக ஒழுங்குபடுத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, இந்த உணவுத் தவிர்ப்புப் போராட்டம் இன்றுடன் நான்காவது நாளாக இடம்பெற்று வருகின்றது.

போராட்டத்தில் ஈடுபடுவோரில் மூவரின் உடல்நிலை மோசமடைந்த நிலையில், அவர்கள் அனைவரும் நேற்று மருத்துவர்களால் பரிசோதிக்கப்பட்டனர். அனைவரையும் மருத்துவமனைக்கு உடனடியாகக் கொண்டுசெல்லுமாறு மருத்துவர்கள் அறிவுறுத்திய போதிலும், அவர்களில் ஒருவர் சிகிச்சைக்குச் செல்வதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். 'காத்திரமான தீர்வு வழங்கப்படாவிடில், உயிர் போனாலும் இந்தப் போராட்டத்தைக் கைவிட முடியாது' என்று அவர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

இந்தப் போராட்டம் தொடர்பில் நேற்று இரவுவரை அரசாங்கம் எந்தவொரு பதிலையும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## ஹெலிகொப்டர்...

பிரதமர் மோடி, குடியரசுத் தலைவர் முர்மு, தமிழக முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் பலரும் இரங்கலைத் தெரிவித்துள்ளனர். (அ-ம)

## கைதான...

உட்பட 10 பேருக்கும் எதிரான விளக்கமறியல் உத்தரவு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கரையோர பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை மீறி கடற்கரையில் கட்டுமானத்தை அமைத்தமை மற்றும் சிலை வைத்தமை தொடர்பில் வெலிகம பலங்கொட கசியப்ப தேரர், திருகோணமலை கோட்டை விகாராதிபதி கல்ஞான வன்ஸ திஸ்ஸ தேரர், சுகித்த வன்ஸ தேரர், சிறிமாபுர விகாரையைச் சேர்ந்த நந்த தேரர் ஆகிய தேரர்கள், மற்றும் கோட்டை விகாரையின் நிர்வாகக் குழு உறுப்பினர்களுமாக 10 பேர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, சந்தேகநபர்களுக்கு எதிரான விளக்கமறியல் உத்தரவு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது. சந்தேகநபர்களுக்கு பிணை வழங்குவதற்கு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களமும், பொலிஸாரும் கடும் ஆட்சேபம் தெரிவித்ததைத் தொடர்ந்தே, விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-50)

## கோத்தாபய...

முன்னெடுத்தவர்கள் மீது குழுவொன்று தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, அந்தப் போராட்டம் கலவரமாக மாறியது. இதன்போது, முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளும் சொத்துக்களும் தீக்கிரையாக்கப்பட்டன.

அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கு ரணிலின் அரசாங்கம் இழப்பீடு வழங்கியது. இதன்போது, முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் போலியான தகவல்களை வழங்கி இழப்பீடுகளைப் பெற்றனர் என்றும், அவர்களிடம் இருந்து அந்தத் தொகையைத் திரும்பப் பெற வேண்டும் எனவும் வலியுறுத்தி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன, முன்னாள் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன, முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுக்கேதன்ன, முன்னாள் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, டிரான் அலஸ் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜகத் அல்விஸ் ஆகியோருக்கு வழக்குத் தொடர்பான அறிவித்தலை வழங்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம)

## ரணிலின்...

நேற்று உத்தரவிட்டுள்ளது. அரச நிதியைப் பயன்படுத்தி வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் (பிரிட்டன்) மேற்கொண்டார் என ரணில் விக்கிரமசிங்க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டில், சமன் ஏக்கநாயக்கவையும் கைது செய்வதற்கு பொலிஸார் அண்மைக்காலமாக முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். எனினும், சமன் ஏக்கநாயக்க தொடர்ச்சியாகத் தலைமறைவாக இருந்தார். நேற்று சட்டத்தரணி ஊடாக நீதிமன்றத்தில் சரணடைந்ததைத் தொடர்ந்தே, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-44)

## ரணிலுக்கு...

உறுப்பினர்கள் என சிலர் நீதிமன்றத்துக்குச் சென்றனர்.

நாடாளுமன்றஉறுப்பினர்களானமனோ கணேசன், கபீர் ஹாசீம், ஹர்ஷ டி சில்வா உள்ளிட்டோரும், ராஜித சேனாரத்ன, மஹிந்த அமரவீர ஆகிய முன்னாள் அமைச்சர்களுமே இவ்வாறு நீதிமன்றத்துக்குச் சென்றனர்.

'பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்ட தலைவரே ரணில் விக்கிரமசிங்க. அவருக்கு ஆதரவு தெரிவிக்கவே வந்தேன். நாட்டில் வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டுவந்தவர் ரணில். நாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட்டபோது அவருடன் நின்றோம். தற்போதும் நிற்கின்றோம்' என்று முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (அ-ம-44)

## தனிப்பட்ட...

பூர்வ பயணம் அல்ல என்பது உறுதியாகியுள்ளது  இவ்வாறு சட்டமா அதிபரின் தரப்பால் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான, மேலதிக சொலிசிஸ்டர் ஜெனரல் திலீப பீரிஸ், 'ரணில் விக்கிரமசிங்கவின் பாரியாருடைய பட்டமளிப்பு நிகழ்வுக்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகாரபூர்வ அழைப்பு விடுக்கப்படவில்லை, அவருக்கு பார்வையாளர் அரங்கிலேயே கதிரை ஒதுக்கப்பட்டிருந்தது. முதலாவது சந்தேகநபரிடம் (ரணில்) விசாரணை முடிவடைந்துவிட்டது. இரண்டாவது சந்தேகநபரிடம் (சமன் ஏக்கநாயக்க) நாளை விசாரணை நடத்தப்படும். சிலவேளை முதலாம் சந்தேகநபரிடம் மீண்டும் விசாரணை நடத்தவேண்டி ஏற்படலாம். எப்படியும் ஒரு மாதத்துக்குள் விசாரணை நிறைவுபெறும் என நம்புகின்றோம்' என்று தனது சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

ரணில் விக்கிரமசிங்க சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக நிர்வாகத்திடம் வாக்குமூலம் பெறப்படவில்லை என்று சுட்டிக்காட்டினர். இதையடுத்து, மேற்படி பல்கலைக்கழகத்திடம் தகவல் பெறுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. வழக்கு, ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு விசாரணைக்கு எடுத்துகொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘காந்த சவிய’ சஞ்சிகைக்கு ஆக்கங்கள் அனுப்பலாம்

இலங்கை மகளிர் பணியகத்தின் ‘காந்த சவிய’ சஞ்சிகைக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. சர்வதேச மகளிர் தினத்தின் கருப்பொருளாகிய ‘உரிமைகள், நீதி, செயல், அனைத்துப் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கும்’ என்ற தலைப்பில் பெண்களின் பங்கை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. எதிர்வரும் 31ஆம் திகதி முன்பதாக womensbureau.wa@gmail.com மற்றும் kanthasaviyawb@gmail என்கின்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். மேலதிக தகவல்களைப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஐ.எம்.எப்....

தொடர்பான மதிப்பீட்டுப் பணிகளைக் கருத்திற்கொண்டு, நாணய நிதியத்தின் ஐந்தாம் கட்ட மீளாய்வு நடவடிக்கைகள் பிற்போடப்பட்டிருந்தன. டித்வா புயலின் பாதிப்புகள் தொடர்பான உலக வங்கியின் மதிப்பீட்டுப் பணிகள் நிறைவடைந்த நிலையிலேயே, நாணய நிதியக் குழு விரைவில் இலங்கைக்கு வரவுள்ளது.

டித்வா பேரிடர் காலத்தில் நெருக்கடியை எதிர்கொள்வதற்காக 206 மில்லியன் டொலர் அவசர நிதியை நாணய நிதியம் வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## பேருந்து...

பேர் படுகாயமடைந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த இ.போ.ச. பேருந்தும், முறிகண்டியில் மணல் ஏற்றியவாறு யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த டிப்பருமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

இ.போ.ச. பேருந்தின் சாரதி, பயணிகள் இருவர், டிப்பரின் சாரதி ஆகிய நால்வரே காயமடைந்துள்ளனர். அவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக் காகச் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-113)

## பண்டத்தரிப்பில்...

பண்டத்தரிப்பில் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைக்குச் சொந்தமான காணியில் கடந்த 2012ஆம் ஆண்டுமுதல் இராணுவத்தினர் முகாம் அமைத்துத் தங்கியிருந்தனர். அந்தக் காணியை விடுவிப்பதற்கு பிரதேசசபையினர் அண்மைக் காலமாகப் பல்வேறு பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர். இதன் தொடர்ச்சியாகவே, அந்த முகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்றுடன் முற்றாக வெளியேறிச் சென்றனர். இந்தக் காணி விடுவிப்புத் தொடர்பான ஆவணங்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை, யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக முகாமிட்டிருந்த இராணுவத்தினர், கடந்த வார இறுதியில் குறித்த முகாமை விட்டு வெளியேறியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

சாவகச்சேரியில் வீட்டு வேலைகளை செய்வதற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (சமையல் மற்றும் வீட்டை சுத்தம் செய்தல்.)

தொடர்புகளுக்கு:- 076 996 5246

(CS60583) J-1

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் இலந்தைக்குளம் வீதியில் புளியம் வீதி முகப்புடன் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- யாழ்ப்பாண பஸ் நிலையம் 3 1/2 km தூரம்.
- A-9 வீதியிலிருந்து 350 m தூரம்.
- வீடு, கடை அமைப்பதற்கு உகந்த இடம்.

தொடர்பு:- 076 860 2770
076 987 8617

(CS 31103) A

# அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



திருவருள் பேறு 10.11.1952 — திருவடிப் பேறு 01.01.2026

## அமரர் திருமதி வயித்திலிங்கம் பரமேஸ்வரி

(கண்ணன் லொட்ஜ் உரிமையாளர் மனைவி - பரமேஸ்வரா சந்தி)

அன்பின் திருவுருவாக மிளிர்ந்து, குடும்பத்தின் ஆணிவேராக விளங்கி கணவர், பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், அயலவர்கள், ஊரவர்கள் என அனைவரையும் தனது அன்பினால் அரவணைத்து ஒரு முன்னுதாரணமான பெண்மணியாக வாழ்ந்து இத்தியடிப் புலத்தாளின் பாதார விந்தக் கமலங்களைப் பற்றிக்கொண்ட அமரர் பரமேஸ்வரி வயித்திலிங்கத்தின் அந்திமத்தின்போது நேரிலும், தொலைபேசி வாயிலாகவும் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலமாகவும், அஞ்சலி உரைகள் மூலமாகவும், மலர்வளையங்கள் வைத்தும் இன்னும் எல்லா வழிகளிலும் தமது அனுதாபங்களையும் அன்பையும் வெளிப்படுத்திய உள்ளங்கள் அனைவருக்கும் நன்றியினைப் பரிமாறிக்கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (29.01.2026) வியாழக்கிழமை அன்று புங்குடுதீவு ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (31.01.2026) சனிக்கிழமை அன்று இல. 119/3 , முன் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்திலும் அதனை தொடர்ந்து மதியபோசன உபசாரமும் நடைபெறும்.

இந்த அறிவிப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மேற்படி இரு நிகழ்வுகளிலும் பங்கெடுத்து அன்னாரை அஞ்சலிக்க வருமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிநிற்கின்றோம்.

இல. 119/3 முன் ஒழுங்கை,
பலாலி வீதி, திருநெல்வேலி.

திரு. த. வயித்திலிங்கம் குடும்பத்தினர்
021 222 0331

(CS/31099) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.01. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.